வண்ணம் ஊன்றிப் பார்த்து அச்சபையானது பயங்கர மடையும்படி மலைகளும் நடுங்கிடும் மிகுத்த வலிமையை யுடைய எனது தோள்கள் இற்றதா? இறவில்லை யென்று சொன்னார்.

புதிய வேதமொன் றுளதெனும் படிறுரை புகன்றிப்
பதியி லுள்ளவர்க் கருங்களை யெனப்பகை விளைத்த
மதுகை மன்னவன் முகம்மதி னுடல்வதைத் திடும்வா
ளிதுகொல் காணுதி நீவிரென் றடலும றெழுந்தார். 11(1513)

(இ-ள்) அவ்வாறு சொன்ன வெற்றியை யுடைய உமறென்பவர் தனக்கு நூதனமான ஒரு வேதமுண்டு மென்றும் பொய்மையாகிய வார்த்தைகளைச் சொல்லி இந்தத் திருமக்கமா நகரத்தின் கண்ணுள்ளவர்களுக்கு அரிய களையைப் போல விரோதத்தை யுண்டாக்கிய வலிமையை யுடைய அரசனான முகம்மது என்பவனின் சரீரத்தைக் கொல்லா நிற்கும் வாளானது இஃதா நீங்கள் பாருங்களென்று சொல்லி எழும்பினார்.

குறுக லாருயி ருதிரங்கொப் பிளித்தகுற் றுடைவா
ளிறுக வீக்கிமற் றொருபடைக் கலம்வல னேந்தித்
தறுகி லாமன வலியொடு புயவரைத் தடத்தி
னறைகொள் குங்குமத் தொடைபுரண் டசைந்திட நடந்தார்.
12(1514)

(இ-ள்) அவர் அவ்வாறு எழும்பிச் சத்துராதிகளின் ஆவியையும் இரத்தத்தையுங் கக்கா நிற்கும் ஒரு குற்றுடைவாளை அரையின்கண் இறுகும்படி கட்டி வேறேயொரு படைக்கலத்தை வலது கையில் தாங்கித் தடைப்படாத மனவலிமையுடன் தோள்களாகிய பெருமை பொருந்திய மலைகளின்கண் வாசனை கொண்ட குங்குமப் புஷ்பத்தினாலான மாலைகள் புரண்டு அசையும் வண்ணம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களிருக்கும் திசையை நோக்கிச் சென்றார்.

உமறெ ழுந்திடும் வெகுளியி னுடையவ னருளா
லமரர் தங்களி லொருவரா னேறுரு வாகிக்
கமல மென்பத முகம்மதி னரும்பகை களைய
விமைநொ டிக்குளந் தரமிருந் தவனியி னிழிந்தார். 13(1515)

(இ-ள்) உமறென்பவர் அவ்வாறு எழுந்திடும் கோபத்தினால் யாவற்றையும் சொந்தமா யுடையவனான அல்லாகு சுபுகானகுவத்த ஆலாவின் திருவருள் கொண்டு தேவர்களான மலாயிக்கத்துமார்களில் ஒரு மலக்கானவர் தாமரை மலர் போன்ற மெல்லிய பாதங்களை யுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களின் அரிய விரோதத்தை நீக்கும் வண்ணம்

காளை மாட்டின் வடிவமாகி இமையா நிற்கும் நொடிப் பொழுதினகம் ஆகாயத்தி லிருந்து இப்பூலோகத்தின்கண் இறங்கினார்.

காற்றி ரட்சியுங் கவையடிக் குளம்பின்கட் டுரமு
மேற்றி ருக்கற வளைந்தெழு மருப்பினில் வியப்புங்
கூற்று றாதுருள் கழுத்தடித் தோனெளிக் குழைவு
நாற்றி மேற்றுளை நாசியிற் றவழ்தரு நாவும். 14(1516)

(இ-ள்) அவ்வாறு இறங்கிய காற்களினது திரட்சியையும் பிளவுற்ற பாதமாகிய குளம்புகளின் உறுதியான வலிமையையும் மேலே திருக்கில்லாது வளைந்து எழா நிற்கும் கொம்புகளில் ஆச்சரியத்தையும் கூற்றுறாது உருண்ட கழுத்தடியின் தோலினது நெளிவைக் கொண்ட வளைவையும் நாற்றி மேல் துவாரத்தைப் பெற்ற மூக்கில் தவழ்கின்ற நாவையுமுடைய.

அசைத்த வாலெடுத் திருபுடை புடைத்துமண் ணதிர
விசைத்த கால்களி லுலவித்தண் பசியபுன் மேய்ந்து
பசித்த வள்ளுகிர் நிகரும றேகிய பாதைக்
கிசைத்த டுத்தது வானகத் துருமெனு மிடபம். 15(1517)

(இ-ள்) ஆகாயத்தின் கண்ணுண்டாகும் இடியென்று சொல்லா நிற்கும் அந்தக் காளை மாடானது அசைக்கின்ற தனது வாலைத் தூக்கி இரண்டு பக்கங்களிலும் மண்ணானது அதிரும் வண்ணம் அடித்து வேகமுற்ற காற்களினால் உலாவிக் குளிர்ச்சி தங்கிய பசிய புற்களைச் சாப்பிட்டு பசியைக் கொண்ட புலியைப் போலும் உமறென்பவர் செல்லுகின்ற பாதையைப் பொருந்தி நெருங்கினது.

உலங்கொ டிண்டிறற் புயனும றெனுமொரு சீயங்
கலன்கள் வில்லிட வெயர்ப்பொடும் விழிக்கனல் கதுவத்
துலங்கு செவ்விதழ் வெள்ளெயி றதுங்கிடச் சுடர்வா
ளிலங்கி டத்தனி வருவது நோக்கிய திடபம். 16(1518)

(இ-ள்) அவ்வாறு நெருங்கிய அந்தக் காளை மாடானது திரண்ட கல்லைப் போலும் திண்ணிய வலிமையைக் கொண்ட தோள்களை யுடையவரான உமறென்று சொல்லும் ஒப்பற்ற சிங்கமானவர் ஆபரணங்கள் நானா பக்கங்களிலும் பிரகாசத்தை வீசவும், கோபத்துடன் இரண்டு கண்களிலு முள்ள அக்கினியானது அதிகமாய்ப் பற்றவும், பிரபையை யுடைய வாளாயுதம் மின்னவும், ஏகமாக நடந்து வருவதைக் கண்களினாற் பார்த்தது.

கவ்வை யங்கடற் புவியினின் முகம்மதைக் கசப்பத்
தெவ்வ ரில்லென மனத்திடைக் களிப்பொடுஞ் சிரித்துக்
குவ்வ திர்ந்திட வுமறுகத் தாபெனக் கூவி
யெவ்வு ழித்தனி செல்குற்றீர் நீவிரென் றிசைத்த. 17(1519)

(இ-ள்) அவ்விதம் பார்த்த அந்தக் காளை மாடானது ஓசையையுடைய அழகிய சமுத்திரத்தைக் கொண்ட இப்பூலோகத்தின்கண் நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களை வருத்தும் வண்ணம் சத்துராதிக ளில்லரென்று சொல்லி மனசின்கண் சந்தோஷத்தோடும் நகைத்துப் பூமியானது நடுங்கும் வண்ணம் உமறு கத்தாபே! என்று கூப்பிட்டு நீவிர் ஏகமாக எவ்விடத்திற்குச் செல்லுகின்றீரென்று கேட்டது.

உரைத்த சொற்செவி புகவுழை யெவரென நோக்கித்
தரைத்த லத்திவ ணொருவரு மிலரெனச் சார
விரைத்த லோடுமவ் வுரைபகர்ந் துமறென விசைப்புத்
திருத்தி நாற்றிசை யெங்கணு நோக்கினர் செம்மல். 18(1520)

(இ-ள்) பெருமையிற் சிறந்தவரான உமறு கத்தாபென்பவர் அக்காளைமாடு சொல்லிய வார்த்தையானது தமது காதுகளில் நுழையவே பக்கத்தில் யாவர்களென்று பார்த்து இப்பூமியி லிடத்தில் ஒருவரு மில்லரென்று சொல்லித் தமது திசையை நோக்கிச் சாரவும், அம்மாடானது ஓசையோடும் அந்த வார்த்தைகளையே சொல்லி மறுத்தும் உமறென்று கூப்பிடச் செவ்வையாக நான்கு திக்குகளிலுமுள்ள எல்லாவிடங்களிலும் பார்த்தார்.

கூறு மாந்தர்க ளிலையெனப் பினும்வழிக் குறுக
வேறு கூவிய தெவரென மறுத்துமுன் னிடைந்து
வேறு மாக்களைக் காண்கிலர் விடையினை நோக்கித்
தேறு மிவ்வுரை பகர்ந்ததிங் கெவரெனத் திகைத்தார். 19(1521)

(இ-ள்) அவ்விதம் பார்த்து வாய் திறந்து பேசும் மனிதர்கள் ஒருவரு மில்லரென்று சொல்லிப் பின்னரும் தமது பாதையிற் பொருந்த மறுத்தும் கூப்பிட்டது. அப்போது அந்த உமறென்பவர் இவ்விதம் கூப்பிடுவோர் யாவரென்று தமது மனமானது வசக்கேடடைந்து தம்மையல்லாமல் மற்ற மனுஷியர்களை அங்கு காணாதவராய் அந்தக் காளை மாட்டைப் பார்த்துத் தெளிந்த இந்த வார்த்தைகளைச் சொன்னது இங்கே யாவரென்று சொல்லித் திகைப்படைந்தார்.

பருந்தெ ழுங்கதிர் வேலும் றெழின்முகம் பார்த்து
வருந்தி லாதுமைக் கூவிய தியானென மதித்துப்
பொருந்து மில்லிடந் தவிர்ந்தெவண் புகுவது புகழோய்
விரிந்த வாய்திறந் தறையுமென் றுரைத்தது விடையே. 20(1522)

(இ-ள்) அப்போது அந்தக் காளை மாடானது பருந்துகள் எழா நிற்கும் பிரகாசத்தைக் கொண்ட வேலாயுதத்தை யுடைய

உமறென்பவரின் அழகிய முகத்தைப் பார்த்து உம்மை மனசின் கண் கருதி வருந்தாது கூப்பிட்டது நான்தானென்று சொல்லிக் கீர்த்தியை யுடைய உமறு கத்தாபே! நீவிர் பொருந்தும் வீட்டை விட்டும் விலகி எவ்விடத்திற்குச் செல்லுகின்றீர்? அச்சமாசாரத்தை உமது விரிவுற்ற வாயைத் திறந்து என்னிடத்தில் சொல்லுமென்று கேட்டது.

ஞான மாமறை முன்னவர் மொழிநட வாம
லீன மின்றிய தேவத மனைத்தையு மிகழ்ந்து
மானி லத்தினிற் புதிதொரு மார்க்கமுண் டாக்கித்
தீனெ னும்பெயர் நிறுத்தித்தன் னுரைப்படி திருத்தி 21(1523)

(இ-ள்) அவ்விதம் கேட்கவே மகத்தாகிய அறிவைக் கொண்ட வேதங்களினது முன்னோர்களின் வார்த்தைக ளானவை நடைபெறாமல் இழிவற்ற நமது தேவதங்க ளெல்லாவற்றையும் நிந்தித்துப் பெருமை தங்கிய இந்தப் பூலோகத்தில் நூதனமாக ஒரு மார்க்கத்தை யுண்டுபடுத்தி அதற்குத் தீனென்று சொல்லும் நாமத்தை நாட்டித் தனது சொல்லின் வண்ணம் யாவர்களையும் திருந்தச் செய்து,

இன்மை லாம்வெறுத் திடப்பகை யெனத்தலை யெடுத்துத்
துனிவி ளைத்திடு முகம்மதி னுடற்றுணி துணித்துச்
சினம கற்றுதற் கெழுந்தன னெனத்தெளிந் தெதிராய்
வினவு மேறுடன் மொழிந்தன ருமறெனும் வீரர். 22(1524)

(இ-ள்) பந்துக்க ளெல்லாவரும் விரோதிக்கும் வண்ணம் விரோதியைப் போலத் தலையெடுத்துத் துன்பத்தை யுண்டாக்கிடும் முகம்மது என்பவனின் சரீரத்தைத் துண்டாக வெட்டி எங்களுடைய கோபத்தை நீக்குவதற்காய் எழும்பினே னென்று தேறுதலுற்றுத் தமக்கு எதிராகக் கேட்கும் காளை மாட்டுடன் உமறென்று சொல்லும் வீரத்தை யுடையவர் சொன்னார்.

ஆதி தூதரை வெறுத்துல கடங்கலுந் திரண்டு
வேத னைத்தொழில் விளைக்கினு மவர்வயின் விளையா
தேத முற்றதும் மனவலி யிடரினைத் தவிர்ந்து
போதல் வேண்டுமா னுமக்கென மறுத்துரை புகலும். 23(1525)

(இ-ள்) அவர் அவ்விதம் சொல்லவே, அந்தக் காளை மாடானது இந்தப் பூமியின் கண்ணுள்ள ஜனங்க ளெல்லாவரும் ஒன்றுசேர்ந்து யாவற்றிற்கும் முதன்மையான ஜல்லஜலாலகு வத்த ஆலாவின் றசூலாகிய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களை விரோதித்து துன்பத்தை யுடைய

செய்கைகளைச் செய்தாலும் அத்துன்பமானது அந்நபிகள் பெருமானவர்க ளிடத்திற் சம்பவியாது; ஆதலால் குற்றமுற்றதான உமது மனதின்கண் பெருகா நிற்கும் துன்பத்தை யொழிந்து நீர் போகவேண்டு மென்று சொல்லி அவரின் வார்த்தைகளை மறுத்துச் சில வார்த்தைகள் சொல்லும்.

பரிக ரித்திரட் படையொடு நிலத்தினிற் பரப்பி
யரச ராயிர ரிகலினின் மனவலிக் கணுவே
திரம தாயினு முகம்மதி னிடத்தினிற் சேற
லுரம தன்றுநி னுரனது முரனல வுரவோய். 24(1526)

(இ-ள்) வலிமையை யுடையவரான உமறு கத்தாபே! இந்தப் பூமியின்கண் கூட்டமாகிய சேனைகளுடன் குதிரைகளையும் யானைகளையும் பரவச் செய்து அரசர்கள் ஆயிரம் பேர் உம்மோடு பொருதினால் உமது இருதயவல்லமைக்கு அப்பொருதுதல் அணுப்போன்ற வலிமையே யானாலும் உமக்கு அந்நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களிடத்தில் சென்று பொருத வல்லமை யில்லை உம்முடைய வல்லமையும் ஒரு வல்லமையல்ல.

படைக்க லத்திலொன் றெடுத்தறி யாப்பகுத் தறியா
விடைக்குண் மெல்லிய னிளமையன் றனியவன் வினையேன்
புடைக்குள் வீரத்தை விளைத்தியேன் முகம்மதின் புகழை
யுடைக்கு நின்வலி யென்பதை யறிவனென் றுரைத்த. 25(1527)

(இ-ள்) அன்றியும், நான் யுத்தத்திற்குரிய ஆயுதங்களில் ஒன்றையாவது எடுத்தறியாத பிரித்துணராக் காளை மாட்டுகளுள் மெலிவையுடையவன். மேலும் இளமையையுடையவன் ஏகனானவன். வினையை யுடையவனாகிய எனது பக்கத்துள் உமது வீரத்தை விளைப்பீரே யானால் நான் உம்முடைய வல்லமை அந்த முகம்மதின் கீர்த்தியைத் தகர்க்கு மென்பதை உணர்வே னென்று சொல்லிற்று.

நந்தி யிவ்வுரை பகர்ந்திட நரபதி யுமறு
கந்த டர்த்தெறி களிறென விருவிழிக் கனல்கள்
சிந்தி டக்கரும் பிருகுடி நுதல்செலச் சினந்து
மந்தி ரக்கதிர் வாளெடுத் தசைத்தெதிர் வந்தார். 26(1528)

(இ-ள்) அந்தக் காளை மாடானது இந்த வார்த்தைகளைச் சொல்ல மனிதாதிபரான உமறென்பவர் கட்டுத்தறியை அடர்த்து வீசா நிற்கும் யானையைப் போல இரண்டு கண்களிலுமுள்ள நெருப்புகள் சொரியும் வண்ணம் கரிய புருவங்கள் நெற்றியிற் செல்லும்படிக் கோபித்து பிரகாசத்தை யுடைய மந்திரவாளைக் கையில் தூக்கியசைத்து அதன் முன்னாக வந்தார்.

எதிர்த்து நின்றற வீசினர் வீசலு மிடபங்
குதித்துத் தம்வலப் பாரிச மாகின குறுகி
மதித்து வீசலு மிடப்புற மானது மறுத்தும்
பதித்து வீசலும் பிற்புற மானது பறந்தே. 27(1529)

(இ-ள்) அவ்விதம் வந்த அவர் அக் காளைமாட்டை எதிர்த்து நின்று அதின் சரீரமானது அற்றுப் போகும் வண்ணம் வாளினால் வீசினார். அவ்வாறு வீசின மாத்திரத்தில் அக் காளை மாடானது தான் நின்றிருந்த இடத்தை விட்டும் சாடித் தனது வலப்பக்கமாகினது மறுத்தும் மனசின்கண் மதிப்பிட்டு அணுகி வீசலும் இடப்பக்க மாயினது. மறுபடியும் அழுத்தி வீசலும் கிளம்பிப் பின்புறமாயினது.

நான்கு திக்கினுங் குதித்துமுன் னணித்துற நடக்குந்
தேன்கு தித்தசெந் தொடைப்புய ருரத்தொடுஞ் சினந்து
வான்கு தித்தமின் னெனக்கர வாளொளி மயங்கத்
தான்கு தித்தனர் துரத்தினர் திரிந்தனர் சாரி. 28(1530)

(இ-ள்) அவ்வாறு அக் காளைமாடானது நான்கு திக்குகளிலும் சாடி முன்னர்ச் சமீபமாய்ச் செல்லும். அதைப் பார்த்துத் தேனானது குதிக்கப் பெற்ற செவ்விய மலர்மாலை யணிந்த தோள்களையுடையவரான உமறென்பவர் வலிமையுடன் கோபித்து வானிலிருந்து பாயா நிற்கும் மின்னலைப் போன்ற தமது கையின் கண்ணுள்ள வாளினது பிரகாசமானது மயங்கும் வண்ணம் சாடித் துரத்தி வலசாரி இடசாரி முன்சாரி பின்சாரியாக நான்கெல்லைகளிலும் திரிந்தார்.

எட்டி யொட்டுவர் வெட்டுவர் வெட்டலு மிடபங்
கிட்டி டாதக லாதுடல் கிழிபட வெதிர்ந்து
முட்டித் தாக்குற வருவபோ லடிக்கடி முடுகுந்
தொட்டி டாதொழி யாதருஞ் சூறையிற் சுழலும். 29(1531)

(இ-ள்) அன்றியும், தாவிப் பொருந்தி வெட்டுவார் அவ்விதம் வெட்டின மாத்திரத்தில் அந்தக் காளைமாடானது அந்த வெட்டுக்கு அகப்படாமலும் அவ்விடத்தை விட்டு நீங்காமலும் எதிர்த்து அவரின் சரீரமானது கிழிபடும் வண்ணம் முட்டித் தள்ளும்படி வருவதைப் போல அடிக்கடி நெருங்கும் மேலும் அவரைத் தீண்டாமலும் அவரைவிட்டு ஒழியாமலும் அரிய சூறைக் காற்றைப் போலச் சுழலா நிற்கும்.

அடுத்து முன்னெதிர்த் திருவளை மருப்பினை யசைக்கும்
வெடித்த வாலிரு புறத்தினு மடிக்கடி விசைக்கும்
படித்த லத்துகள் விசும்புறக் குளம்பினிற் பறிக்கு
மிடித்த வானுறு மேறென வதிர்ந்திடு மிடபம். 30(1532)

(இ-ள்) அன்றியும், அந்தக் காளை மாடானது அவ்வுமறென்பவரைச் சமீபித்து அவரின் முன்னாக எதிர்த்து வளைந்த இரண்டு கொம்புகளையும் அசையும்படி செய்யும் பிளவுற்ற வாலினால் அடிக்கடி இருபக்கங்களிலும் அடிக்கும் பூமியின் கண்ணுள்ள துகளானது ஆகாயத்திற் பொருந்தும் வண்ணம் கால்களினது குளம்புகளினால் பூமியைப் பறியச் செய்யும் ஆகாயத்தின்கண் இடியா நிற்கும் இடியைப் போல ஒலிக்கும்.

கண்ணி னுக்கெதிர் தோன்றிடுங் காணொணா தகலும்
விண்ணி னிற்பறந் திடுந்திசை விசும்பெலாந் திரியு
மெண்ணு முன்னுமுன் வந்திடுங் கான்மடித் தெதிரே
மண்ணி னிற்படுத் திடுங்குனிந் தெழுந்துவா னிமிர்க்கும். 31(1533)

(இ-ள்) அன்றியும், கண்களுக்கு எதிராகத் தெரியும் காணொண்ணாது அவ்விடத்தை விட்டும் அகன்று செல்லும் ஆகாயத்தின்கண் பறக்கும். எண்டிசைகளிலும் அந்தர முழுவதிலும் திரியும் நினைப்பதற்கு முன்னும் முன்னராக வரும் நான்கு காலுகளையும் மடித்துக் கொண்டு எதிராகப் பூமியின்கண் படுக்கும் குனிந்து எழும்பி வாலை நிமிரும் வண்ணம் செய்யும்.

இடப மிவ்வணந் திரிதர விருவிழி சிவந்து
தொடரு வார்சுடர் வாட்கொடு தாக்குவர் துரத்தி
யடரு வார்மறிப் பார்திகைப் பாரடுத் தடுத்துக்
கடுவி சைகொழுங் காறளர்ந் திதழினைக் கறிப்பார். 32(1534)

(இ-ள்) அந்தக் காளை மாடானது இந்தப் படியாகத் திரிய உமறுகத்தா பென்பவர் இரண்டு கண்களும் செவப்புற்று அம்மாட்டைப் பின்பற்றிப் பிரகாசத்தை யுடைய வாளாயுதத்தைக் கொண்டு தாக்குவார். ஓட்டிக் கொண்டு நெருங்குவார் எதிர்த்துத் தடுப்பார். மயங்குவார். சமீபித்துச் சமீபித்துக் கடிய விசையைக் கொண்ட தமது இரு கால்களும் தளர்ச்சியுற்று உதடுகளைக் கடிப்பார்.

கரத்தை நோக்குவர் வாளினை நோக்குவர் கடுப்பி
னெருத்தை நோக்குவர் வீரத்தை நோக்குவ ரெதிராத்
தரத்தை நோக்குவ ரவையினி லபூசகு லுடனே
யுரைத்த வார்த்தையை நோக்குவர் நோக்குவ ருளத்தை. 33(1535)

(இ-ள்) அன்றியும், விரைவாய்த் தமது கையைப் பார்ப்பார். வாளைப் பார்ப்பார். அந்தக் காளை மாட்டைப் பார்ப்பார். தமது வீரத்தைப் பார்ப்பார். அக்காளை மாட்டை எதிர்த்து ஜெயிக்காத ஒரு தன்மையைப் பார்ப்பார். அபூஜகிலோடும் சபையில் பேசின வார்த்தைகளைப் பார்ப்பார். தமது இருதயத்தைப் பார்ப்பார்.

இன்றி ருந்தெழுந் திகலட லரிமுகம் மதுவை
வென்றி கொண்டன மிலையல திவணெறி மேவுங்
கன்றி னைக்கடிந் தோமில்ல யெனமனங் கசங்கி
நன்று நன்றுநம் வீரமென் றகத்திடை நகுவார். 34(1536)

(இ-ள்) அவ்வாறு பார்த்த உமறுகத்தா பென்பவர் நாம் இன்றையத்தினம் அங்கிருந்து எழும்பி விரோதத்தைக் கொண்ட வலிமையையுடைய சிங்கத்தை நிகர்த்த முகம்மதென்பவனை வெற்றி கொண்டோமில்லை. அல்லது இந்தப் பாதையின்கண் பொருந்திய காளையாகிய மாட்டுக் குட்டினய வெட்டி னோமில்லையென்று சொல்லி இருதயம் கசங்கப் பெற்று நமது வீரமானது நல்லது! நல்லது!! என்று மனசின்கண் சிரித்தார்.

முனிந்து புன்னகை கொண்டவா ளுமறைமுன் னடுத்துக்
குனிந்து பாதல மோந்துடல் குழைத்தறத் தூங்கிக்
கனிந்த வாயசைப் போட்டிரு காதினை யசைத்து
வனைந்த போலக லாதுநின் றதுமழ விடையே. 35(1537)

(இ-ள்) அவ்விதம், கோபித்துப் புன்சிரிப்புக் கொண்ட வாளாயுதத்தை யுடைய உமறுகத்தா பென்பவரை இளம்பருவத்தையுடைய அந்தக் காளை மாடானது முன்னாக நெருங்கித் தலையைத் தாழ்த்திப் பரப்பை யுடைய பூமியை முகந்துத் தனது சரீரத்தைக் குழையச் செய்து மிகவும் தூக்கமுற்றுக் கனியப் பெற்ற வாயை அசைபோட்டு இரண்டு செவிகளையும் அசையும்படி செய்து வனைந்ததைப் போல் நீங்காது அவ்விடத்திலேயே நின்றது.

ஏறு முன்னணித் திட்டதென் றெழிற்கர வாளான்
மாறி வீசினர் முடுக்கின ரடிக்கடி வளைத்துக்
கோறல் செய்குவ னியானெனக் குவலயங் குலுங்கச்
சீறி முன்னினு மும்மடங் கெனும்படி திரிந்தார். 36(1538)

(இ-ள்) அப்போது உமறுகத்தா பென்பவர் அந்தக் காளை மாடானது தமக்கு முன்னாகச் சமீபித்ததென்று சொல்லி அழகிய தமது கையிலிருந்த வாளினால் மாறி வீசி நெருங்கினார். அன்றியும், நான் உன்னைக் கொல்லுவேனென்று சொல்லி இப்பூமியானது குலுங்கும் வண்ணம் சீற்றமுற்று அடிக்கடி தடுத்து முன்னிலும் மூன்று பங்கென்று சொல்லும் வண்ணம் நான்கெல்லைகளிலும் திரிந்தார்.

தொலைந்த திவ்வணம் வெய்யவன் றோன்றுமுன் றொடுத்திட்
டலைந்து லைந்திடைந் தறத்தவித் தசறுமட் டாகக்
கலைந்த தன்றியே றகப்பட விலையெனக் கலங்கி
மலைந்தி டாமன மறுகுற வுமறுள மலைந்தார். 37(1539)

(இ-ள்) உமறென்பவர் இந்தப்படியாகச் சூரியன் உதயமாகு முன்னர் தொட்டு அசறு வரைக்கும் அலைந்து உலைந்து வசக்கேடாகி மிகவும் தவிப்புற்று அக்காளைமாடானது கலைந்து நம்மைவிட்டு மொழிந்ததேயல்லாமல் நம்மிடம் அகப்படவில்லையே யென்று சொல்லிக் கலக்கமடைந்து தடுமாற்றமுறாத தமது மனமானது சுழலும் வண்ணம் தடுமாற்றமுற்றார்.

மட்டு வார்பொழி னெறியிடை மழவிடை யெதிர்ந்து
வெட்டு மென்றுரை பகர்ந்ததும் வெகுளியி னடந்து
பட்ட செய்தியும் புதுமையு மூரவர் பலர்க்கும்
விட்டு ரைத்திட வேண்டுமென் றெழுந்தனர் விரைவின். 38(1540)

(இ-ள்) அவ்வாறு தடுமாற்ற முற்ற உமறென்பவர் தேனானது ஒழுகா நிற்கும் சோலைகளையுடைய பாதையின்கண் இளம் பருவத்தையுடைய காளைமாடானது எதிர்த்து வெட்டுமென்று வார்த்தைகள் சொன்னதையும் கோபத்தோடும் சென்று தாம்பட்ட சமாசாரத்தையும் அதனாலுண்டான ஆச்சரியத்தையும் தமது ஊராகிய திருமக்கமா நகரத்தை யுடையவர்களான காபிர்கள் பலருக்கும் பிரித்துச் சொல்ல வேண்டுமென்று சீக்கிரமாய் எழும்பினார்.

குறித்து வந்தவை விடுத்தெழு மும்றினைக் கூவித்
தெறித்த நுண்டுளி முகிற்குடை முகம்மதைச் செகுப்ப
வெறித்த வெஞ்சின வீரத்தின் விழைவுக ளனைத்து
மறைத்தி ரோவெனப் புகன்றுபோ யதுமழ விடையே. 39(1541)

(இ-ள்) அப்போது இளம் பருவத்தையுடைய அந்தக் காளை மாடானது மனசின்கண் குறிப்பிட்டு வந்தவைகளைவிட்டு எழா நிற்கும் உமறுகத்தாபைக் கூப்பிட்டு நுண்ணிய திவலைகள் தெறிக்கும் மேகக்குடையை யுடைய நாயகம் நபிமுகம்மது சல்லல்லாகு அலைகிவசல்ல மவர்களைக் கொலைசெய்யும் வண்ணம் ஆவேசமாகிய வெவ்விய கோபத்தைக் கொண்ட வீரத்தினது ஆசைப் பெருக்கங்க ளெல்லாவற்றையும் மறையச் செய்தீரோ? என்று சொல்லிப் போயிற்று.

கொண்ட வேகமும் வீரமும் புறந்தலை குனியக்
கண்ட காரணத் தொடுமிளைப் பருநெறி காட்ட
விண்டு திர்த்தமெய் வியர்ப்பொடு மெல்மெல நடந்து
மண்டு பேரவை யபூசகு லிடத்தில்வந் தனரே. 40(1542)

(இ-ள்) அந்தக் காளை மாடானது அவ்வாறு போகவே உமறுகத்தா—பென்பவர் தாம் கொண்ட கோபமும் வீரமும்

பின்னால் தலை தாழும் வண்ணம் கண்களினாற் பார்த்த காரணத்துடன் தம் மெலிவானது அரிய பாதையைக் காட்டும்படி வேறுபட்டு உதிர்க்கப் பெற்ற சரீரத்தின் வேர்வையோடும் பையப் பைய நடந்து நெருங்கிய பெரிய சபையையுடைய அபூஜகி லிடத்தில் வந்து சேர்ந்தார்.

முகம லர்ச்சிகெட் டறத்தவித் துடல்வெயர் முழுகப்
பகும னத்தும றடைந்தவை யனைவரும் பார்த்து
முகம்ம தின்வயி னடைந்தது நடந்ததும் வகுத்துப்
புகர றும்புக ழோயுரை யெனப்புகன் றனரே. 41(1543)

(இ-ள்) பிரிவைக் கொண்ட மனத்தை யுடைய உமறென்பவர் அவ்விதம் சந்தோஷமற்று மிகவும் தவிப்புற்று வெயர்வையினால் சரீரமானது முழுகும் வண்ணம் அங்கு வந்து சேர்ந்தவைகளை யாவர்களும் பார்த்துக் குற்றமற்ற கீர்த்தியை யுடையவரே! நீவிர் முகம்மதென்பவனிடத்தில் போனதையும் அங்கு நடந்ததையும் வகைப்படுத்திச் சொல்லு மென்று கேட்டார்கள்.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

அறபிகள் குழுவி னாப்ப ணமரபூ சகுலை நோக்கிப்
பொறைமதக் கரிகோ டேற்ற புரவல ருயிரை மாந்திக்
கறைகெழுங் குருதி வைவேற் காவல ருமறு கத்தாப்
மறைபடா நெறியிற் கண்ட புதுமையை வகுக்க லுற்றார். 42(1544)

(இ-ள்) அவர்கள் அவ்வாறு கேட்கவே, மதத்தைக் கொண்ட கொம்புகளை யுடைய மலைபோன்ற யானைகளின் மீது பொருந்திய அரசர்களின் ஆவியைக் குடித்து இரத்தக் கறை நிறைந்த கூர்மை தங்கிய வேலாயுதத்தை யுடைய இராஜரான உமறுகத்தா பென்பவர் அறபிகளான காபிர்களின் கூட்டத்தினது மத்தியில் உறைந்திருக்கும் அபூஜகிலைப் பார்த்துத் தாம் பாதையின்கண் மறைவுபடாது தமது கண்களினாற் பார்த்த அற்புதத்தை வகுத்துச் சொல்ல ஆரம்பித்தார்.

மண்ணினிற் றிசையிற் சூழ்ந்த மறிதிரைக் கடற்குள் வானோர்
விண்ணினிற் பெரியோ ராய்ந்த மெய்மறை தனக்குட் டேர்ந்த
திண்ணிய ருரைக்குட் கேட்ட திலைமனந் தெளிய வென்றன்
கண்ணினிற் கண்ட தியாருங் காணொணாப் புதுமை யென்றார்.
43(1545)

(இ-ள்) இப்பூமியின் கண்ணும் திசைகளிலும் பூமியை வளைந்த மடங்கா நிற்கும் அலைகளையுடைய சமுத்திரத்தினுள்ளும் தேவர்களான மலாயிக்கத்துமார்களின் ஆகாயத்திலும் மேன்மையை யுடையவர்களால் ஆராயப் பெற்ற

சத்தியத்தை யுடைய வேதத்தினுள்ளும் வலிமையை யுடையவர்களின் வார்த்தைகளி னுள்ளும் மனமானது தெளியும் வண்ணம் கேள்வியுற்றதில்லை. அன்றியும், என்னுடைய கண்களினால் பார்த்தது யாவர்களும் பார்க்க முடியாத அற்புதமென்று சொன்னார்.

சுரத்திடை விடையொன் றங்ஙன் றனித்துநின் றதிர்ந்தென் பேரை
யுரைத்தது விளிப்பக் கேட்டே னுணர்ந்தியா ரென்ன நேர்ந்தேன்
விரைத்தலி னெங்கே கின்றீ ரெனவிறன் முகம்ம துற்ற
துரைத்தனக் குறும்பு தீர்ப்பத் துணிந்தனென் றுரைத்தன் மாதோ.
44(1546)

(இ-ள்) யான் போன பாதையின் கண்ணுள்ள அவ்விடத்தில் ஒரு காளை மாடானது ஏகமாக நின்று ஒலித்து என் நாமத்தைக் கூறி அது என்னைக் கூப்பிடும் வண்ணம் எனது காதுகளினாற் கேள்வியுற்றதை மனசின்கண் தெரிந்து நம்மைக் கூப்பிடுகிறவர் யாவரென்று நேர்ந்து பார்த்தேன். அப்போது அந்தக் காளைமாடானது நீவிர் விரைவோடும் எங்கே செல்லுகின்றீரென்று கேட்க, வலிமையையுடைய முகம்மதென்பவன் பொருந்திய அதிகாரத்தை யுடைய பொல்லாங்கை நீக்கும் பொருட்டு நிச்சயித்துச் செல்லுகின்றேனென்று சொன்னேன்.

இன்றெனை யடர்த்தோர் செவ்வி யியன்முகம் மதுவை வென்றோ
ரென்றதற் கெதிர்ந்து கைவா ளெறிந்தன னுரத்திற் றாக்கி
நின்றனன் மறித்தே னெந்த நிலத்தினுந் தொடர்ந்து காலிற்
சென்றனன் றவித்தே னென்னாற் செய்ததொன் றில்லை யன்றே.
45(1547)

(இ-ள்) அதைக் கேட்ட அந்தக் காளை மாடானது இன்றையத் தினம் என்னைச் சண்டை செய்து ஜெயித்தவர்கள் அழகிய ஒழுங்கை யுடைய அந்த முகம்மதென்பவர்களை ஜெயித்தவர்கள் என்று சொன்னதற்காய் யான் எதிர்த்து எனது கையிலிருந்த வாளாயுதத்தினால் வீசி வலிமையோடும் அம்மாட்டைத் தாக்கி நின்று தடுத்து எந்நிலங்களிலும் எனது காற்களினால் நடந்துப் பின்பற்றித் தவிப்படைந்தேன். ஆனால் இவ்விதமெல்லாம் சிரமப்பட்டும் அம்மாட்டை என்னாற் செய்தது யாதொன்று மில்லை.

காற்றெனப் பறக்கு மூழிக் கனலெனச் சீறுங் கொல்லுங்
கூற்றென வெதிருஞ் செல்லிற் குலவரை யனைத்துஞ் சுற்றுந்
தோற்றிடா விசும்பிற் றாவுஞ் சுழலுமட் டிகிரி யென்னச்
சீற்றமுற் றடுத்துப் பின்னு முன்னுமே திரியு மன்றே. 46(1548)

(இ-ள்) ஆனால், அந்தக் காளை மாடானது காற்றைப் போலப் பறக்கும். வட்டமுகாக்கிளியைப் போலச் சீறும். கொல்லா நிற்கும எமனைப் போல எதிர்க்கும். மேகங்களை யுடைய மேன்மை கொண்ட மலைகளெல்லாவற்றையும் சுற்றும். கட்பார்வைக்குத் தோற்றாது ஆகாயத்தின்கண் தாவும். சுழலா நிற்கும் பண்டியினது சக்கிரத்தைப் போலக் கோபமுற்று நெருங்கிப் பின்னாலும் முன்னாலும் திரியும்.

அலகையின் குலமோ வானி னமரரி லொருவன் றானோ
வுலகுறுஞ் சின்னோ தெய்வ முருவெடுத் ததுவோ செவ்விச்
சிலைநுதல் கதீசா கேள்வன் செய்தொழில் வஞ்சந் தானோ
நிலமிசை விடையாய்த் தோன்றி நின்றவம் மாயந் தானே. 47(1549)

(இ-ள்) ஆதலால் இப்பூமியின்கண் காளை மாடாக உதயமாகி நின்ற அந்த மாயமானது பைசாசங்களின் குலத்திலுள்ளதோ? அல்லது வானலோகத்தின் கண்ணுள்ள தேவர்களான மலாயிக்கத்து மார்களிலொருவனோ? இவ்வுலகத்தின்கண் பொருந்திய ஜின்னோ? தெய்வமானது உருவெடுத்த தோற்றமோ? அழகிய வில்லைப் போலும் நெற்றியை யுடைய கதீஜாவென்பவளின் நாயகனான முகம்மது செய்யா நிற்கும் வஞ்சனைத் தொழிலோ? இவற்றில் இன்னதென்று யானறியேன்.

மாற்றுரை வேதம் பேசு முகம்மதைத் தேடிச் செல்லு
மாற்றிலிவ் விடையைக் கண்டே னசறுமட் டாகக் கண்ணிற்
றோற்றிடாத் துன்ப முற்ற புதுமையைத் தொகுத்து வல்லே
சாற்றுதற் கமைந்தேன் வீரந் தனைமறுத் திலனியா னென்றார்.
48(1550)

(இ-ள்) ஆனால் யான் மாறுபாடான வார்த்தைகளைக் கொண்ட வேதத்தைச் சொல்லும் முகம்மதென்பவனை நாடிச் செல்லுகின்ற பாதையின்கண் இந்தக் காளை மாட்டைப் பார்த்து அசறுவரையும் கண்களில் தோற்றாத வருத்தத்தை யடைந்த ஆச்சரியத்தை ஒழுங்காய் உங்களிடத்திற் சொல்லுவுதற்காகச் சீக்கிரமாய் இங்கு வந்து பொருந்தினேன். எனது வீரத்தை யான் மறுத்திலேனென்று சொன்னார்.

கொடுவரி யனைய கத்தாப் குமரரீ துரைப்பக் கேட்டு
விடமெனக் கறுத்துச் சிந்தை வெருவரச் சுழலுஞ் சுற்றி
யுடனிருந் தவருந் தம்மி லொண்புயங் குலுங்க நக்கி
யடலுறு முமறு கத்தா பணிமுக நோக்கிச் சொல்வார். 49(1551)

(இ-ள்) வேங்கையை நிகர்த்த கத்தாபென்பவரின் புதல்வரான உமறென்பவர் அவ்வாறு சொல்ல வலிமையை யுடைய அபூஜகி

லென்பவனும் அவனுடன் சூழ்ந்திருந்தவர்களாகிய மற்றும் காபிர்களும் தங்களின் காதுகளினாற் கேள்வியுற்று மனமானது விஷத்தைப் போலும் கறுப்படைந்து ஒருவருக்கொருவர் தங்களின் ஒள்ளிய தோள்கள் குலுங்கும் வண்ணம் சிரித்து வலிமை பொருந்திய அவ்வுமறு கத்தாபின் அழகிய முகத்தைப் பார்த்துச் சொல்லுவார்கள்.

ஈதொரு புதுமை யாக வெண்ணிநீ ருரைத்தீர் வேத
மாதவன் முகம்ம தென்போன் வளர்த்தவஞ் சனைக்கு ணூறு
பேதமொன் றதற்குக் காணா திதனைநீர் பிதற்றிப் பேச
றீதுறு மிவைபோ லியாங்கள் கண்டதுந் தெரிக்கொ ணாதே.
50(1552)

(இ-ள்) நீவிர் இதையொரு ஆச்சரியமாக மனசின்கண் நினைத்துச் சொல்ல வந்தீர். ஆனால் இது வேதத்தினது மகாதவத்தை யுடையவனான அந்த முகம்மதென்பவன் உண்டாக்கிய வஞ்சனைகளுக்குள் நூறு பகுப்பான ஒன்றிற்கு பற்றாது. இவ்வாச்சரியத்தை நீவிர் பலகால் பேசுவதினால் தீதுண்டாகும். இவைபோல நாங்கள் பார்த்ததையுந் தெரிவித்துச் சொல்ல முடியாது.

இன்னமு மிவைபோ னூறா யிரம்விதங் கண்ணுற் றாலு
மன்னவன் விளைக்கும் வஞ்ச மதனைநீ ரமைத்தல் வேண்டும்
பன்னுத லெவருங் கேட்பிற் பழுதுறும் பருதி வேலோய்
முன்னுமுன் கருத்தி லுன்னும் படிமுடித் திடுமி னென்றார்.
51(1553)

(இ-ள்) இன்னமும் சூரியனை யொத்த வேலாயுதத்தை யுடையவரே! இவை போல இலட்சம் விதம் நீவிர் பார்த்தாலும் மன்னவனான அந்த முகம்மதென்பவன் செய்யும் வஞ்சகத்தை அமைத்தல் வேண்டும். அவ்விதம் அமைக்காது வெளியிற் சொல்லுவதை யாவர்களும் கேட்பார்களே யானால் அதனால் குற்றமுண்டாகும். ஆதலால் ஆதியில் உம்முடைய கருத்தில் நினைத்த வண்ணம் செய்து முடித்திடுமென்று சொன்னார்கள்.

பொய்யினைப் புகலேன் கண்ட புதுமையைப் புகன்றேன் றோன்று
மெய்யினைப் பொய்யென் றோத லியாவர்க்கும் நீதிய தன்றே
யைய்யுற லுரைக்க லாகா ததிசய மறைக்க லாகா
வையகத் தியற்கை யீதென் றுமறிவை வழங்கிப் போனார். 52(1554)

(இ-ள்) அவர்கள் அவ்விதம் சொல்லவே உமறுகத்தா பென்பவர் நானென் பொய்மையான வார்த்தைகளைச் சொல்ல மாட்டேன் கண்களினாற் கண்ட ஆச்சரியத்தைச் சொன்னேன்.